REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2021 ஜனவரி 22 வெள்ளிக்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

வரு. 89 இல. 19 | January 22, Friday, 2021 | 20பக்கங்கள் | 30/-

## PHI மீது துப்பியவருக்கு 6 ஆண்டு கடூழிய சிறை

அட்டுலுகமையில் பொது சுகாதார பரிசோதகர்கள் மீது எச்சில் துப்பிய கொரோனா தொற்றாளருக்கு 6 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டணை பாணந்துறை நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ளது. குறித்த நபருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மூன்று வழக்குகளுக்கு தலா இரண்டு ஆண்டுகள் வீதம் இவ்வாறு 6 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. கடந்த டிசம்பர் மாதம் 2 ஆம் திகதி குறித்த கொரோனா தொற்றாளரை அழைத்துவர சென்ற பொழுதே அவர் இவ்வாறு பொது சுகாதார பரிசோதகர்கள் மீது எச்சில் துப்பியதோடு, வாகனத்தில் செல்லவும் மறுப்பு தெரிவித்திருந்தார்.

## அமெரிக்க புதிய ஜனாதிபதிக்கும் துணை ஜனாதிபதிக்கும் வாழ்த்து




அமெரிக்காவின் 46 ஆவது ஜனாதிபதியாக பதவியேற்றிருக்கும் ஜோ பைடனுக்கும் துணை ஜனாதிபதி கமலா ஹரிசுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

ஜோ பைடனுக்கு வாழ்த்து தெரிவித்து ஜனாதிபதி பதிவிட்டுள்ள டுவிட்டர் பதிவில், "நானும் எனது அரசாங்கமும் ஒரு

06

## தொழில் முயற்சிகளுக்கான கடன் வழங்கல் திட்டம்

### இலங்கை மத்திய வங்கி தீர்மானம்




நாட்டின் பொருளாதாரத்துக்கு கைகொடுக்கும் நோக்குடன் நுண், சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில் முயற்சிகளுக்கான கடன்வழங்கல் திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்திருக்கிறது.

மத்திய வங்கியின் நாணயச்சபைக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, மத்தியவங்கி அதன் துணை நில் வைப்பு வசதி வீதத்தையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தையும் முறையே 4.5 சதவீதமாகவும்

06

### அமெரிக்காவின் 46ஆவது ஜனாதிபதியானார் பைடன்

## வெள்ளை மாளிகை ஓவல் அலுவலகத்தில் பணிகளை ஆரம்பித்து 15 உத்தரவுகள்

### ட்ரம்பின் கொள்கைகள் தலைகீழாக மாற்றியமைப்பு



அமெரிக்காவின் 46ஆவது ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள ஜோ பைடன், வெள்ளை மாளிகையில் உள்ள ஓவல் அலுவலகத்தில் தனது பணிகளை ஆரம்பித்தார்.

அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்ற முதல் நாளிலேயே, முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப் எடுத்த சில கொள்கை முடிவுகளை ஜோ பைடன் மாற்றியமைத்துள்ளார்.

கொரோனா நெருக்கடி, குடியேற்றம், இனவாத பிரச்சினை உள்ளிட்ட 15 முக்கிய உத்தரவுகளில் அவர் உடனடியாக கையெழுத்திட்டுள்ளார். கொரோனா நோய்த் தடுப்பு விஷயத்தில் மத்திய அரசின்

06

### ஒரு குண்டூசியையேனும் தயாரிக்க

## எமது நாட்டை எவ

## இனி குறை கூற மு

### பாதணி தொழிற்சாலை திறப்பு நிகழ்வில் 'சூம்




ஒரு குண்டூசியையேனும் தயாரிக்காத நாடென இனியும் நம்மை நாமே குறை கூறிப் பலனில்லையென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ (20) தெரிவித்தார்.

பன்னிபிட்டிய, மாகும்புர பிரதேசத்தில் நிறுவப்பட்ட Yoo Brand பாதணி தொழிற்சாலையை திறந்து வைக்கும் நிகழ்வில் காணொளி தொழில்நுட்பத்தினூடாக கலந்து கொண்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு குறிப்பிட்டார். இத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் பாடசாலை பாதணிகள் சந்தை விலையின் 30 வீதம் குறைவாக எதிர்காலத்தில் ச.தொ.ச விற்பனை நிலையங்களில் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு கிட்டும்.

பாதணி தொழிற்சாலையை திறந்து வைத்து பிரதமர் ஆற்றிய உரையில்,

இன்றைய தினம் இலங்கையர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியடையக் கூடியதொரு நாளாகும்.

06






### விமான நிலையங்கள் நேற்று திறப்பு

## லாவது விமானம்

## ரிலிருந்து வந்தது

### னங்களுக்கு மேல் பயணிகளுடன் வருகை



வர்த்தக விமானங்களுக்காக விமான நிலையங்கள் மீண்டும் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து முதல் வர்த்தக விமானம் நேற்றுக் காலை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கியது.

அதன்படி, ஓமானின் மஸ்கட்டிலிருந்து டபிள்யூ.வை 371 என்ற ஓமான் ஏயர்லைன்ஸ் விமானம் நேற்றுக் காலை 7.40 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கியது.

இந்த விமானத்தின் மூலம் சுமார் 50 இலங்கையர் நாடு திரும்பியுள்ளதுடன், அவர்கள் இராணுவத்தினரால் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கும் அழைத்துச் செல்லப்பட்டனர். வர்த்தக விமானங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையினால் பயணிகள் மீண்டும் சாதாரண விமான கட்டணத்தைப் பெற முடியும்.

முன்னதாக, கொரோனா தொற்று காரணமாக விமான நிலையம் மூடப்பட்ட கால கட்டத்தில் சிறப்பு விமானங்கள் மட்டுமே செயல்பட்டு வந்தன. அவற்றின் விமானக் கட்டணங்கள் மிக அதிகமாக இருந்தன.

இதேவேளை, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்காக விமான நிலையங்கள் திறக்கப்பட்டுள்ள நிலையில், சுமார் 15 விமானங்கள் நேற்று இலங்கைக்கு வர

06



உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட YOO பாதணிகளை சந்தைக்கு அறிமுகம் செய்யும் நிகழ்வு கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்சவின் தலைமையில் மாகம்புர YOO பிரன்டிஸ் தனியார் நிறுவனத்தில் நடைபெற்றது. பாதணிகளை அமைச்சர்களான விமல் வீரவன்ச, பந்துல குணவர்தன, சுசில் பிரேம் ஜெயந்த் ஆகியோர் பார்வையிடுவதை காணலாம்.

## மேல் மாகாண பாடசாலைகளை பெப்.15 முதல் ஆரம்பிக்க திட்டம்

### சுகாதார பரிந்துரையின் பின்னரே இறுதி முடிவு

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**



மேல் மாகாணத்தின் பாடசாலைகளை பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதியளவில் ஆரம்பிக்க எதிர்ப்பார்த்துள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார்.

சுகாதார பணிப்பாளர் நாயகத்தின் பரிந்துரைகளை பெற்றுக்கொண்ட பின்னர் மேல் மாகாணத்தில் பாடசாலைகளை ஆரம்பிப்பது தொடர்பில் இறுதி தீர்மானம் மேற்கொள்ளப்படுமென அவர் சுட்டிக்காட்டினார்.

மேல் மாகாணத்தில் ஆரம்பிக்கப்படக் கூடிய பாடசாலைகள் தொடர்பில் அதிபர்கள், பிரதேச சுகாதார பரிசோதகர்கள் மற்றும் கோட்ட, வலயக்கல்வி பணிப்பாளர்கள் இணைந்து தீர்மானங்களை எடுத்து எதிர்வரும் பெப்ரவரி 03ஆம் திகதிக்கு முன்னர் கல்வி அமைச்சின் செயலாளருக்கு

06

## வெள்ளவத்தையில் 23 பேருக்கு கொரோனா

### சந்தை தற்காலிகமாக பூட்டு



வெள்ளவத்தை சந்தையில் பணியாற்றிய 12 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து, சந்தை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக வெள்ளவத்தை சுகாதார மருந்துவ அதிகாரி தெரிவித்துள்ளார். சில தினங்களாக வெள்ளவத்தைப்

06



## 20 நாள் சிசுவின் உடல் எரிப்பு
## உயர் நீதிமன்றத்தில் வழக்கு

### பொதுவான பொறிமுறைகளுடன்

## PCR, அன்டிஜன் பரிசோதனைகள்

## நுவரெலியா: 16 தமிழ் பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாகின்றன